**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 25 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.403/2019**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.40/2018. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | சூரியன் (இறப்பு) |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | பால்நாடார் |
| 4. | வயது | 55/2018 |
| 5. | தொழில் | கூலி |
| 6. | முகவரி | லால்பகதுூர் சாஸ்திரி தெரு, வி.வி.ஆர். நகர், சாயல்குடி. |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | ராயப்பன் |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | தொம்மை அந்தோணி |
| 9. | வயது | 40/2018 |
| 10. | தொழில் | கூலி |
| 11. | முகவரி | வி.வி.ஆர். நகர், சாயல்குடி. |
| **3 வது எதிரியின் விபரம்** | | |
| 12. | பெயர் | அழகு |
| 13. | தகப்பனார்/கணவர் பெயர் | செல்லம் |
| 14. | வயது | 40/2018 |
| 15. | தொழில் | விவசாயம் |

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:19 +0530

| | | |
|---|---|---|
| 16. | முகவரி | பாரதியார் தெரு, வி.வி.ஆர். நகர், சாயல்குடி. |
| 17. | சம்பவ நாள் | 21.03.2018 ம் தேதி 20.00 மணி |
| 18. | புகார் தேதி | 23.03.2018 ம் தேதி 12.00 மணி |
| 19. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A1, A3 – 28.03.2018<br>A2 – இல்லை. |
| 20. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1, A3 – 04.04.2018<br>A2 – Anticipatory bail grated as per order of the Hon'ble Principal District Judge, Ramanathapuram in Cr.M.P.No.708/2018, Dated : 09.04.2018. |
| 21. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 22. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 24.10.2019 |
| 23. | விசாரணை முடிவுற்ற நாள் | 23.03.2026 |
| 24. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | 1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் |
| 25. | காலதாமதத்திற்கான காரணம் | – |
| 26. | அரசு தரப்பு சாட்சிகள் | (see below) |

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 10.03.2026 | 10.03.2026 |
| அ.சா.2 | 10.03.2026 | 10.03.2026 |
| அ.சா.3 | 16.03.2026 | 16.03.2026 |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:22 +0530

| | | |
|---|---|---|
| 27. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 23.03.2026 |
| 28. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 29. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | M.P.No.06/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 10.03.2026. |
| 30. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.சொக்கேசன் |
| 31. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.P.செல்லப்பாண்டியன் |
| 32. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 33. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 25.03.2026 |
| 34. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 25.03.2026 |
| 35. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 2வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. 1வது எதிரி |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:26 +0530

| | | |
|---|---|---|
| | | வழக்கு விசாரணையின்போது இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய் விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. 2, 3 எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திரு.S.சொக்கேசன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.செல்லப்பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. கடந்த 21.03.2018ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் புகார்தாரர் தனது ஊரிலிருந்து சாயல்குடிக்கு வந்தபோது சாயல்குடி சோதனைச் சாவடியின் பின்புறம் வழக்கின் 3வது எதிரி டீ கடையின் எதிரே நின்று கொண்டிருந்த 1, 2வது

எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து எந்த ஊருடா நீ யார் மகன்டா என்று விசாரித்தற்கு புகார்தாரர் தான் இலந்தைகுளம் கணேசன் மகன் என்று கூறியபோது 1, 2 எதிரிகள் இருவரும் இங்கு எதுக்குடா தேவிடியா மகனே வந்தாய் என்று புகார்தாரரின் கன்னத்தில் கையால் அடித்தும், புகார்தாரர் அவர்களுடன் வாக்குவாதம் செய்து பின்பு ஊரக்கு சென்று விட்டு திரும்ப தன்னுடன் வந்த அருண்குமாரை காணவில்லை என்று புகார்தாரரை திரும்ப தேடி வந்தபோது அங்கேயே நின்று கொண்டிருந்த 1, 2 வது எதிரிகள் இருவரும் ஏலே போனவன் திரும்பி வந்துட்டான்லே என்று கூறி 1 வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் ஓங்கி வெட்டியபோது புகார்தாரர் அதனை இடது கையால் தடுத்தபோது இடது கை பெருவிரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி அருகில் கிடந்த மண்வெட்டியை எடுத்து புகார்தாரரின் தலையின் நடுவே வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், இதனை பார்த்த டீ கடை வைத்திருந்த 3 வது எதிரி புகார்தாரரின் மீது சுடு பாலினை தூக்கி ஊற்றியதில் புகார்தாரருக்கு இடது கை மணிக்கட்டிறக்கு மேல் மற்றும் வலது கை புஜம், வலது காதின் பின்புறம் ஆகிய இடங்களில் சுடுபால் காயம் ஏற்பட்டும், போகும்போது எதிரிகள் மூவரும் இனிமேல் இந்த பக்கம் வந்தால் உன்னை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:35 +0530

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 24.10.2019 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. 1 வது எதிரி இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டு அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போய் விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2, 3 எதிரிகள் ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 13.02.2020 ம் தேதியன்று 2, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி 2, 3 எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு 2, 3 வது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 8 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும்,

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:45 +0530

சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அ.சா.2 ஆகவும், கூடுதல் சாட்சியாக நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு நேரத்தில் சாயல்குடி சோதனைச்சாவடி அருகே சுமார் 20 க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை நடந்து கொண்டிருந்ததைப் பார்க்க சென்றபோது யாரோ கீழே தள்ளிவிட்டதாகவும், தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டதாகவும், தள்ளிவிட்டவர்கள் யார் என்று தெரியாது என்றும், காயத்திற்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த சாயல்குடி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:48 +0530

என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். (அ.சா.1 யை ஒத்தே அ.சா.2 ம் சாட்சியம் அளித்துள்ளார்.)

6. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 23.03.2018 ம் தேதி 07.00 மணிக்கு சாயல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த இலந்தை குளம் கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் செல்வம் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.2) பெற்று 12.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.40/2018 பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் அன்றே மாலை 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியராஜன் மற்றும் ராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிகளான செல்வம், பால்ராஜ், சின்னதுரை, கணேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 28.03.2018 ம் தேதி காலை 11.00 மணிக்கு சாயல்குடி V.V.R. பஸ் ஸ்டாப் அருகே 1 மற்றும் 3 வது எதிரிகளை இருப்பதாக கிடைத்த தகவலை பெற்று போலீஸ் பார்ட்டியுடன் அங்கு சென்று உச்ச நீதிமன்ற கட்டளையை கடைபிடித்து காரணம் கூறி எதிரிகள் கைது செய்து 11.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பிரேத



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:52 +0530

பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து பின்பு நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்துள்ளதாகவும், 2 வது எதிரி மருத்துவமனையில் இருந்ததால் அவரை கைது செய்யவில்லை என்றும், பின்பு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.மாரீஸ்வரி என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்து அவர் அ.சா.1 க்கு அளித்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று (அ.சா.ஆ.6) பெற்றுள்ளதாகவும், பின்பு இந்த வழக்கில் இறுதியாக புலன் விசாரணை முடித்து 10.10.2018 ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)-ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து 2, 3 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 23.03.2026 ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

8. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:56 +0530

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் 2, 3 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1ம், 2, 3 எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

10. இவ்வழக்கில் அ.சா.1ம், 2, 3 எதிரிகளும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.3 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

11. அ.சா.3 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, கடந்த 21.03.2018ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் புகார்தாரர் தனது ஊரிலிருந்து சாயல்குடிக்கு வந்தபோது சாயல்குடி சோதனைச் சாவடியின் பின்புறம் வழக்கின் 3வது


Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:11:59 +0530

எதிரி டீ கடையின் எதிரே நின்று கொண்டிருந்த 1, 2வது எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து எந்த ஊருடா நீ யார் மகன்டா என்று விசாரித்தற்கு புகார்தாரர் தான் இலந்தைகுளம் கணேசன் மகன் என்று கூறியபோது 1, 2 எதிரிகள் இருவரும் இங்கு எதுக்குடா தேவிடியா மகனே வந்தாய் என்று புகார்தாரரின் கன்னத்தில் கையால் அடித்தும், புகார்தாரர் அவர்களுடன் வாக்குவாதம் செய்து பின்பு ஊரக்கு சென்று விட்டு திரும்ப தன்னுடன் வந்த அருண்குமாரை காணவில்லை என்று புகார்தாரரை திரும்ப தேடி வந்தபோது அங்கேயே நின்று கொண்டிருந்த 1, 2வது எதிரிகள் இருவரும் ஏலே போனவன் திரும்பி வந்துட்டான்லே என்று கூறி 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் ஓங்கி வெட்டியபோது புகார்தாரர் அதனை இடது கையால் தடுத்தபோது இடது கை பெருவிரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி அருகில் கிடந்த மண்வெட்டியை எடுத்து புகார்தாரரின் தலையின் நடுவே வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், இதனை பார்த்த டீ கடை வைத்திருந்த 3வது எதிரி புகார்தாரரின் மீது சுடு பாலினை தூக்கி ஊற்றியதில் புகார்தாரருக்கு இடது கை மணிக்கட்டிறக்கு மேல் மற்றும் வலது கை புஜம், வலது காதின் பின்புறம் ஆகிய இடங்களில் சுடுபால் காயம் ஏற்பட்டும், போகும்போது எதிரிகள் மூவரும் இனிமேல் இந்த பக்கம் வந்தால் உன்னை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:12:02 +0530

12. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு (அ.சா.ஆ.2) அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு நேரத்தில் சாயல்குடி சோதனைச்சாவடி அருகே சுமார் 20க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை நடந்து கொண்டிருந்ததைப் பார்க்க சென்றபோது யாரோ கீழே தள்ளிவிட்டதாகவும், தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டதாகவும், தள்ளிவிட்டவர்கள் யார் என்று தெரியாது என்றும், காயத்திற்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த சாயல்குடி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு (அ.சா.ஆ.2) மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:12:05 +0530

சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் 2வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

14. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 2வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 324, 506(ii)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. 1வது எதிரி வழக்கு விசாரணையின்போது இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய் விட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

15. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

16. 2, 3 எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:12:08 +0530

CC - 403/2019. Date-25.03.2026.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் தேதி புதன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:12:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | செல்வம் (புகார்தாரர்) |
| அ.சா.2 | பால்ராஜ் (சம்பவ சாட்சி) |
| அ.சா.3 | கார்த்திக் (நிலைய சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 23.03.2018 | புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 23.03.2018 | புகார் வாக்குமூலம் |
| Ex.P.3 | 23.03.2018 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | 23.03.2018 | பார்வை மகஜர் |
| Ex.P.5 | 23.03.2018 | மாதிரி வரைபடம் |
| Ex.P.6 | 21.03.2018 | விபத்துப்பதிவேடுடன் கூடிய காயச்சான்று |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.25 12:12:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

குறிப்பு:-

1. சாட்சிகளின் விசாரணையின்போது 2, 3 எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.